ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

15.01.2026

1. ஆனந்த வடிவான ஞானகுருவே
ஆறுமுகமாய் வந்த திருவுருவே
ஞானமுடன் உன் பெருமை கூறி
நாட்டிடுவேன் அரங்கமகான் யானும்

2. யானும் விசுவாவசு கலை திங்கள்
உயர்வான முதல் குருவார அருளாசி
ஞானம்பட அருட்சுவடி வழி ஆசிதனை
ஞானவான்கள் படை பெருக உரைப்பேன்

3. உரைக்கவே அரங்கன் யான் வகுத்த
உண்மை நெறி சன்மார்க்க வழி
குறைவின்றி மக்களெல்லாம் வந்து
குருவே என சரணாகதி அடைந்து வர

4. வருகவே பிரணவக் குடிலில்
வல்லமைமிக்க ஞானவரம்
முருகப்பெருமான் தந்தருளியபடி
முழுமைகண்ட ஞானிகள் அனைவரும்

5. அனைவரும் சேர்ந்து அருளிவர
அகிலத்தார் வருகை புரிந்து
அனைவரும் என் பீடம் வணங்கி
ஆக்கம் பக்குவமும் தருகின்ற

6. தருகின்ற அருளமுதை உண்டு
தந்தேன் தாராளத் தயவாக
ஆறுமுகனார் அன்னதான சேவையில்என
அளவிலாப் பொருளுதவி செய்து

7. செய்துமே தருமவான்கள் எனும்
சிறப்பான அடையாளம் கூட்டி
மெய்ஞான தீட்சை பலவற்றை
முழுமை கண்ட என் சீடன் ராம்குமார் கரம்பட

8. கரம்பட படிப்படியாய் ஏற்றிட
கந்தனோடு அரங்கன் யானும்
வரமாக்கி தீட்சை சித்திகளும்
வளர்ச்சி மாற்றம் தேற்றமென

9. தேற்றமென பல வகையும் கண்டு
தொடர் தருமம் செய்கின்றபடி
ஆற்றலும் மாற்றமும் கூடி
அரங்கன் என் வழி தருமவான்களாக

10. ஆகவே நிலைகள் உயர்ந்து
அகிலத்தில் வேலவன் தேடியே
வகைபட அருளும் வாசி நடத்தும்
வல்லமை கொண்ட ஞானவான்களாக

11. ஆகவே உலகோர் தேறிவர
அரங்கனென் ஞானப்படைகளாகி
யுகமாற்றம் நிகழும் சடுதியில்
உரைத்திட்ட அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி